A–BRL–M–L–UBNB

# TAMIL

## Paper–II

## (Literature)

*Time Allowed : Three Hours*

*Maximum Marks : 250*

### QUESTION PAPER SPECIFIC INSTRUCTIONS

**Please read each of the following instructions carefully before attempting questions.**

Thre are **EIGHT** questions divided in **Two Sections**.

Candidate has to attempt **FIVE** questions in all.

Question no. **1** and **5** are compulsory and out of the remaining, **THREE** are to be attempted choosing at least **ONE** from each section.

The number of marks carried by a question / part is indicated against it.

Answers must be written in **TAMIL**.

Word limit in questions, wherever specified, should be adhered to.

Attempts of questions shall be counted in chronological order. Unless struck off, attempt of a question shall be counted even if attempted partly. Any page or portion of the page left blank in the answer book must be clearly struck off.

---

## SECTION – A

Q.1. பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் 150 சொற்களுக்கு மிகாமல் விடை தருக :— 10×5=50

Q.1(a) புதல்வன் தாய், நாலூர்க் கோசர், உயிர் தவச்சிறிது, ஆரல் பார்க்கும் குருகு ஆகிய தொடர்களைக் குறுந்தொகை கொண்டு விளக்குக. 10

Q.1(b) ஆருயிர் முறைவழிப் படுமென்பதைக் கணியன் பூங்குன்றனார் காட்டுமாறு காட்டுக. 10

Q.1(c) திருக் குறளில் மணற்கேணி, பீலிபெய் சாகாடு, வெள்ளத்தனைய மலர் நீட்டம், இணர் ஊழ்த்தும் நாறா மலர் ஆகியன உவமைகளாகக் கூறப்பெறும் நுட்பத்தை விளக்குக. 10

Q.1(d) கும்பகருணன் வீடணன் அழைப்புக்கு இணங்காத நிலைக்குரிய காரணங்களைக் காட்டுக. 10

Q.1(e) மாணிக்கவாசகர் தம் சிறுமையையும் இறைவன் பெருமையையும் எங்ஙனம் உணர்த்துகின்றார் ? 10

**Q.2. பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் 200 சொற்களுக்கு மிகாமல் விடை தருக :—**

Q.2(a) குறுந்தொகைப் பாடல்களில் காணப்பெறும் உவமைச் சிறப்பை எடுத்துக்காட்டுகளால் விளக்குக. 15

Q.2(b) சிலப்பதிகார 'வேட்டுவவரி' நிகழ்ச்சிகள் வழி வெளிப்படும் பண்பாட்டுக் கூறுகளை எடுத்துரைக்க. 15

Q.2(c) 'செங்கோன்மை' என்னும் அதிகாரத்தில் திருவள்ளுவர் அரசனின் ஆட்சி பற்றிக் கூறுவன யாவை ? 20

**Q.3. பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் 200 சொற்களுக்கு மிகாமல் விடை தருக :—**

Q.3(a) மாங்காட்டு அந்தணன் கோவலனிடம் உனரத்த செய்திகளைக் 'காடு காண் காதை' வழி நின்று கூறுக. 15

Q.3(b) கும்பகருணன் அறவோன் என்பதை அவன் உனரவழி உணர்த்துக. 15

Q.3(c) பாவை நோன்பு நோற்கும் நெறியையும், அதனாற் பெறும் பயன்களையும் திருப்பாவை கொண்டு காட்டுக. 20

**Q.4. பின்வரும் பாடற் பகுதிகள் வரும் இடத்தையும், அவற்றின் பொருட் சிறப்பையும் புலப்படுத்துக :—**

Q.4(a) 'மேற்பால் ஒருவனும் அவன்கட் படுமே.' 15

Q.4(b) 'பகல் வெல்லும் கூகையைக் காக்கை'. 15

Q.4(c) 'அன்னை ஒப்பாய் எனக்கு அத்தன் ஒப்பாய் என் அரும்பொருளே!' 20

## SECTION – B

**Q.5. பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் 150 சொற்களுக்கு மிகாமல் விடை தருக :—** **10×5=50**

Q.5(a) கண்ணம்மாவைக் குழந்தையாகக் காணும் பாரதியின் தாய்மை உள்ளத்தைப் புலப்படுத்துக. 10

Q.5(b) குடும்ப விளக்கில் பாவேந்தர் பாரதிதாசன் முதியோர் காதலை உரைக்குமாறு வரைக. 10

Q.5(c) நீதிமன்றத்தையே விசாரணைக்கு உட்படுத்தும் எளிய மனிதர்களின் உள்ளக் குமுறலைக் கவிஞர் நா. காமராசன் எங்ஙனம் வெளிப் படுத்துகின்றார் ? 10

Q.5(d) அறம் வாழுமா ? என்ற வினாவுக்குப் பேராசிரியர் மு.வ. விடையாகக் கூறும் கருத்துகளை வரைக. 10

Q.5(e) கடந்த காலத்தில் கவிதையின் பாடு பொருள் எப்படி அமைந்தது என அறிஞர் அண்ணா எடுத்துரைக்கின்றார் ? 10

**Q.6. பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் 200 சொற்களுக்கு மிகாமல் விடை தருக :—**

Q.6(a) கண்ணனை மானுடத்தின் பல வடிவங்களாகப் புனையும் பாரதியாரின் புதிய நோக்கை எடுத்துரைக்க. 15

Q.6(b) மு. வரதராசனார் இன்றைய சமூக அவலங்களை எங்ஙனம் எடுத்துரைக்கின்றார் ? 15

Q.6(c) தமிழகம் தாழ்ந்து போனதற்குக் காரணங்களாக அறிஞர் அண்ணா காட்டுவன யாவை ? 20

**Q.7. பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் 200 சொற்களுக்கு மிகாமல் விடை தருக :—**

Q.7(a) சித்திரப்பாவையில் இடம் பெறும் அண்ணாமலை, ஆனந்தி என்னும் இருவர் பண்பு நலன்களை வரைக. 15

Q.7(b) 'அந்த உயிலின் மரணம்' என்ற சிறுகதை உணர்த்தும் வாழ்க்கை நுட்பங்களை எடுத்துரைக்க. 15

Q.7(c) யாருக்கும் வெட்கமில்லை நாடகம் காட்டும் பிரமிளாவின் அவல வாழ்வுக்குச் சமுதாயமே காரணமாவதைத் தெளிவுறுத்துக. 20

**Q.8. பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் 200 சொற்களுக்கு மிகாமல் விடை தருக :—**

Q.8(a) சீர்திருத்தச் சுவடே இல்லாமல் இருந்த பிற்போக்குச் சமுதாயத்தை முத்துப்பட்டன் காட்டுவதை விளக்குக. 15

Q.8(b) தொழிலாளர் பாடல்களின் சிறப்பை மலையருவி கொண்டு காட்டுக. 15

Q.8(c) சிறுவர் உலகம் குறித்த மலையருவிப் பாடல்களின் சிறப்புகளை எடுத்துரைக்க. 20

CS (Main) Exam : ,2014

**C-DRN-N-L-VBNB**

# TAMIL

## Paper II

## ( LITERATURE )

*Time allowed : **Three** Hours*

*Maximum Marks : **250***

---

### QUESTION PAPER SPECIFIC INSTRUCTIONS

***Please read each of the following instructions carefully before attempting questions :***

*There are **EIGHT** questions divided in **TWO SECTIONS**.*

*Candidate has to attempt **FIVE** questions in all.*

*Questions no. **1** and **5** are compulsory and out of the remaining, **THREE** are to be attempted choosing at least **ONE** from each section.*

*The number of marks carried by a question/part is indicated against it.*

*Answers must be written in **TAMIL**.*

*Word limit in questions, wherever specified, should be adhered to.*

*Attempts of questions shall be counted in chronological order. Unless struck off, attempt of a question shall be counted even if attempted partly. Any page or portion of the page left blank in the Question-cum-Answer Booklet must be clearly struck off.*

---

## SECTION A

1. பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் 150 சொற்களுக்கு மிகாமல் விடை தருக : *10×5=50*

(a) குறுந்தொகையில் காணப்படும் தோழி கூற்றுப் பாடல்கள் நயம் மிக்கனவாயத் திகழ்வதை, நும் பாடப்பகுதியிலிருந்து, ஏதேனும் இரு சான்றுகள் வழி புலப்படுத்துக. *10*

(b) தெய்வப் புலவர் கண்ட அறிவுடைமையின் தனித் தன்மைகளைக் சுட்டுக. *10*

(c) சிலப்பதிகாரம் - அடைக்கலக் காதையில் சமயப் பொதுமை எவ்வாறு வெளிப்படுத்தப்பட்டுள்ளது ? *10*

(d) கும்ப கருணன் வதைப்படலத்தில் வரும் வீடணனின் பண்பு நலன்களை விளக்குக. *10*

(e) தம் அவல நிலையைச் சுட்ட நீத்தல் விண்ணப்பத்தில், மாணிக்க வாசகர் சுட்டும் உவமைகளுள் இரண்டினை விளக்குக. *10*

2. (a) புறநானூற்றுப் பாடல்களில் காணும் உலகப் பார்வைகளை விளக்குக. *15*

(b) திருக்குறளில் காணும் மேலாண்மை சார்ந்த சிந்தனைகளைச் சுட்டுக. *15*

(c) குறுந்தொகைப் பாடல்களில் புலப்படும் தமிழர்தம் பண்பாட்டுச் சிறப்புகளை விளக்குக. *20*

3. (a) கவுந்தி அடிகளாரின் பண்பு நலன்களை விளக்குக. *15*

(b) கும்ப கருணன், செஞ் சோற்றுக் கடன் கழித்த செம்மல் என்பது எவ்வாறு பொருந்தும் ? *15*

(c) பாவை நோன்பு நோற்பதால் உண்டாகும் உலகப் பயன்களாக ஆண்டாள் கூறுவன யாவை ? *20*

4. பின்வரும் பாடற்பகுதிகள் வரும் இடத்தையும் அவற்றின் பொருட்சிறப்பையும் புலப்படுத்துக.

(a) 'சிறுகோட்டுப் பெரும்பழம் தூங்கியாங்கு.' *15*

(b) 'கற்புக் கடம் பூண்ட இத்தெய்வம் அல்லது பொற்புடைத் தெய்வம் யாம்கண் டிலமால்.' *15*

(c) 'பசுமண் கலத்துள் நீர் பெய்திரீஇ யற்று.' *20*

## SECTION B

**5.** பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் 150 சொற்களுக்கு மிகாமல் விடை தருக : *10×5=50*

(a) சமுதாயச் சீர் கேடுகளைக் கண்ணன் பாட்டில் பாரதியார் சாடுவதைத் தெளிவு செய்க. *10*

(b) குடும்ப விளக்கில் தாய்மையின் ஆற்றலைப் பாவேந்தர் எவ்வெவ்வாறு விளக்குகிறார் ? *10*

(c) அரசியல் அறப் பிறழ்வுக்கான காரணங்களாக மு. வரதராசனார் கூறுவன யாவை ? *10*

(d) சித்திரப்பாவையில் வரும் அண்ணாமலையின் பண்பு நலன்களைச் சுட்டுக. *10*

(e) முத்துப்பட்டன் கதையில் காணும் புரட்சிப் போக்குகளைத் தெளிவு செய்க. *10*

**6.** (a) 'கண்ணன் என் தந்தை' என்னும் பாட்டில் கண்ணனின் பெருமைகளாகப் பாரதியார் கூறுவன யாவை ? *15*

(b) குடும்ப விளக்கின் வழியே பாரதிதாசனார் காண விரும்பும் சமுதாய மாற்றங்கள் யாவை ? *15*

(c) நா. காமராசனின் 'வானலில்' கவிதையில் காணும் கவிதை நயங்களை விளக்குக. *20*

7. (a) கட்சி அரசியல் பற்றி மு. வரதராசனார் கூறுவன யாவை ? *15*

(b) தம் காலப் புலவர்களின் பிற்போக்கு உணர்வுகளாக அறிஞர் அண்ணா கூறுவன யாவை ? *15*

(c) மாறிவரும் சமுதாய நடைமுறைகளைச் சித்திரப்பாவை ஆசிரியர் எவ்வாறு வெளிப்படுத்துகிறார் ? *20*

8. (a) சமூகச் சிக்கல்களை ஆழமாகப் பதிவு செய்வதில் ஜெயகாந்தன் வல்லவர் என்பதைக் குருபீடத்தில் வரும் ஒரு சிறுகதை கொண்டு விளக்குக. *15*

(b) 'யாருக்கும் வெட்கமில்லை' என்னும் நாடகத்தில் இடம் பெற்றுள்ள அரசியல் அங்கதங்களைச் சுட்டுக. *15*

(c) மலையருவியில், ஒப்பாரிப் பாடல்கள்வழிப் பெறப்படும் பண்பாட்டுக் கூறுகளைச் சுட்டுக. *20*

CS (Main) Exam:2015

C-AVZ-O-UNLB

# TAMIL

## Paper II

## ( LITERATURE )

*Time Allowed : **Three** Hours*

*Maximum Marks : **250***

---

### QUESTION PAPER SPECIFIC INSTRUCTIONS

***Please read each of the following instructions carefully before attempting questions :***

*There are **EIGHT** questions divided in **TWO SECTIONS**.*

*Candidate has to attempt **FIVE** questions in all.*

*Questions no. **1** and **5** are compulsory and out of the remaining, any **THREE** are to be attempted choosing at least **ONE** from each section.*

*The number of marks carried by a question / part is indicated against it.*

*Answers must be written in **TAMIL**.*

*Word limit in questions, wherever specified, should be adhered to.*

*Attempts of questions shall be counted in sequential order. Unless struck off, attempt of a question shall be counted even if attempted partly. Any page or portion of the page left blank in the Question-cum-Answer Booklet must be clearly struck off.*

---

## SECTION A

**Q1. கீழ்க்காணும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் 150 சொற்களுக்கு மிகாமல் விடை தருக :** *10×5=50*

(a) தோழி அறத்தொடு நிற்றல் குறித்து ஔவையார் கூறும் குறுந்தொகைப் பாடல் கருத்தைப் புலப்படுத்துக. *10*

(b) பாரி மகளிரை விச்சிக் கோனுழைக் கொண்டு சென்ற கபிலர் கூற்றை விவரிக்க. *10*

(c) திருக்குறள் உணர்த்தும் வலியறிதலை விளக்குக. *10*

(d) இராமபிரான் கும்பகருணனிடம் எழுப்பிய வினாக்களையும் கும்பகருணன் கூறிய பதிலையும் தொகுத்துரைக்க. *10*

(e) மாணிக்கவாசகர் தம் துன்ப நிலையை நீத்தல் விண்ணப்பத்தில் வெளிப்படுத்துமாற்றை விவரிக்க. *10*

**Q2. கீழ்க்காணும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் விடை தருக :**

(a) 'ஐம்பொறிகளும் இறைவன் இன்பத்தைக் காட்டிலும் இன்பம் செய்வது போலத் துன்பமே செய்யும்' என்று மாணிக்கவாசகர் கருத்தை விளக்குக. *20*

(b) அமைச்சன் இயல்பு குறித்து திருவள்ளுவர் கூறும் கருத்துகளை விவரிக்க. *15*

(c) 'இவள் உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே' என முடியும் குறுந்கொகைச் செய்யுளில் பொதிந்துள்ள உள்ளுறையை விவரிக்க. *15*

**Q3. கீழ்க்காணும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் விடை தருக :**

(a) பொற்கொல்லன் சூழ்ச்சியும் கோவலன் வீழ்ச்சியும் குறித்து விவரிக்க. *20*

(b) பத்தி உணர்வுக்கும் பாலியல் சிந்தனைக்கும் உள்ள உறவை ஆண்டாளின் திருப்பாவை வழிநின்று விளக்குக. *15*

(c) 'செஞ்சோற்றுக் கடன்தீர்த்த அறவோன் கும்பகருணன்'. ஆராய்க. *15*

**Q4. கீழ்வரும் பாடற்பகுதிகள் பயிலும் இடத்தையும் அவற்றின் இலக்கிய நயத்தையும் வெளிப்படுத்துக :**

(a) 'வண்ணச் சீறடி மண்மகள் அறிந்திலள்' *20*

(b) 'மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்' *15*

(c) 'கிங்கிணி வாய்ச்செய்த தாமரைப் பூப்போலே செங்கண் சிறுச்சிறிதே எம்மேல் விழியாவோ ?' *15*

## SECTION B

**Q5. கீழ்க்காணும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் 150 சொற்களுக்கு மிகாமல் விடை தருக :** *10×5=50*

(a) பாரதியிடம் ஆழப்பதிந்திருந்த கண்ணன் தத்துவத்தைப் புலப்படுத்துக. *10*

(b) தாலாட்டுப் பாடல்களில் இடம் பெறும் அறுவடைச் செய்திகளைப் புலப்படுத்துக. *10*

(c) சித்திரப்பாவையில் வரும் ஆனந்தியின் பண்பு நலன்களை விளக்குக. *10*

(d) மு.வ. விள் அரசியல் குறித்த சிந்தனைகளை விளக்குக. *10*

(e) நாட்டுப்புறத் தெய்வங்களின் உருவாக்கத்தை முத்துப்பட்டன் கதை வழிநின்று விவரிக்க. *10*

**Q6. கீழ்க்காணும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் விடை தருக :**

(a) ஜெயகாந்தனின் சமுகக் கண்ணோட்டத்தைக் 'குருபீடம்' சிறுகதைத் தொகுப்பு வழி விவரிக்க. *20*

(b) சமுதாயமே ஒருவரின் அவல வாழ்வுக்குக் காரணம் என்பதை 'யாருக்கும் வெட்கமில்லை' நாடகம் வழிநின்று விளக்குக. *15*

(c) தொழிலாளர் பாடல்களின் அமைப்பும் சிறப்பும் குறித்து 'மலையருவி' வழிநின்று விவரிக்க. *15*

**Q7. கீழ்க்காணும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் விடை தருக :**

(a) நா. காமராசனின் கவிதை புனையும் திறனை அவரது 'கருப்பு மலர்கள்'வழிப் புலப்படுத்துக. *20*

(b) அகிலனின் சமுதாயப் பார்வையைச் 'சித்திரப்பாவை' வழி விவரிக்க. *15*

(c) 'அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை என்பதற்குச் சான்று பாரதிதாசனின் முதியோர் காதல்' : விளக்குக. *15*

**Q8. கீழ்க்காணும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் விடை தருக :**

(a) தமிழகம் தாழ்ந்து போனதற்கு அறிஞர் அண்ணா கூறும் காரணங்களை விவரிக்க. *20*

(b) எல்லையில்லா ஆற்றல் கொண்ட காதலியாகக் கண்ணன் பாரதிக்குக் காட்சி தந்ததை விளக்குக. *15*

(c) முத்துப்பட்டன் கதை வெளிப்படுத்தும் சமூக முரண் குறித்து ஆராய்க. *15*

CS (MAIN) Exam:2016 **M-ESC-D-TML**

# தமிழ் / TAMIL

## தாள் II / Paper II

## (இலக்கியம்) / ( LITERATURE )

| | |
|---|---|
| கால அளவு : **மூன்று** மணி நேரம் | மொத்த மதிப்பெண்கள் : **250** |
| *Time Allowed : **Three** Hours* | *Maximum Marks : **250*** |

### வினாத்தாள் குறித்த அறிவுறுத்தல்கள்

**வினாக்களுக்கு விடையெழுத முனையுமுன் பின்வரும் அறிவுறுத்தல் ஒவ்வொன்றும் அருள்கூர்ந்து படிக்கவும் :**

மொத்தம் **எட்டு** வினாக்கள் **இரண்டு பிரிவுகளாகப்** பகுக்கபட்டுள்ளன.

மொத்தத்தில் **ஐந்து** வினாக்களுக்கு விடையளிக்கவும்.

வினாக்கள் ***1, 5*** ஆகியவை கட்டாயம் விடையளிக்க வேண்டியவை. எஞ்சிய வினாக்களுள் பிரிவு ஒவ்வொன்றிலும் குறைந்தது **ஒரு** வினா தெரிவுசெய்து **மூன்று** வினாக்களுக்கு விடையளிக்கவும்.

ஒரு வினா/ பகுதிக்கு உரிய மதிப்பெண் அதற்கு நேரே குறிக்கப்பட்டுள்ளது.

விடைகள் **தமிழில்** எழுதப்பட வேண்டும்.

வினாக்களில் குறிக்கப்பட்டுள்ள சொற்களின் எண்ணிக்கை வரம்பைக் கட்டாயம் பின்தொடரவேண்டும்.

விடையளிக்கப்பட்ட வினாக்கள் வரிசைமுறையில் கணக்கிடப்படும். ஒரு வினாவிற்கு ஒரு பகுதியே விடையெழுதப்பட்டிருப்பினும் அது அடிக்கப்பட்ட அவ்வினாவும் விடையளிக்கப்பட்ட வினாவாகக் கணக்கிடப்படும். வினா-விடைக் கையேட்டில் வெறுமையாக விடப்பட்ட பக்கம் அல்லது பக்கத்தின் பகுதி தெளிவாக அடிக்கப்பட வேண்டும்.

### QUESTION PAPER SPECIFIC INSTRUCTIONS

***Please read each of the following instructions carefully before attempting questions :***

*There are **EIGHT** questions divided in **TWO SECTIONS**.*

*Candidate has to attempt **FIVE** questions in all.*

*Questions no. **1** and **5** are compulsory and out of the remaining, any **THREE** are to be attempted choosing at least **ONE** from each section.*

*The number of marks carried by a question/part is indicated against it.*

*Answers must be written in **TAMIL**.*

*Word limit in questions, wherever specified, should be adhered to.*

*Attempts of questions shall be counted in sequential order. Unless struck off, attempt of a question shall be counted even if attempted partly. Any page or portion of the page left blank in the Question-cum-Answer Booklet must be clearly struck off.*

## SECTION A

**Q1. கீழ்க்காணும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் 150 சொற்களுக்கு மிகாமல் விடை தருக :** *10×5=50*

(a) "எழுகுளிறு மிதித்த ஒரு பழம்; பெருந்தேன் – இழைக்கும் நாடன்; நல்வோள் கணவன் இவன்" ஆகிய தொடர்களைக் குறுந்தொகை கொண்டு விளக்குக. *10*

(b) "அறிவுடையோன் ஆறு அரசும் செல்லும்" என்பதை ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன் கூற்றின்வழி ஆராய்க. *10*

(c) "காலம் அறிந்து செயின், தீரா இடும்பைத் தரும்; உள்ளத்து அனையது உயர்வு" ஆகியன உணர்த்தும் செய்திகளைச் சுட்டுக. *10*

(d) கும்பகர்ணன் இராமனிடம் கூறிய சினமொழிகளை எடுத்துரைக்க. *10*

(e) இறைவனின் பெருமைகளாக மாணிக்கவாசகர் நீத்தல் விண்ணப்பத்தில் குறிப்பிடுவனவற்றைப் புலப்படுத்துக. *10*

**Q2.** (a) குறிஞ்சித்திணையில் கபிலர் உணர்த்தும் செய்திகளைக் குறுந்தொகைவழி விவரி. *20*

(b) சிலப்பதிகார ஆய்ச்சியர் குரவை கூறும் ஆய மகளிர் செயல்களை விளக்குக. *15*

(c) திருக்குறள் உணர்த்தும் அவையறிதலை விளக்குக. *15*

**Q3.** (a) சிலம்பில் வேட்டுவவரி உணர்த்தும் பண்பாட்டு வாழ்வியல் நிகழ்வுகளை விவரி. *20*

(b) "ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி" ஆண்டாள் உணர்த்தும் செய்திகளைப் புலப்படுத்துக. *15*

(c) அற உள்ளம் கொண்டவன் கும்பகர்ணன் என்பதை விவரி. *15*

**Q4.** **கீழ்வரும் பாடற்பகுதிகள் பயிலும் இடத்தையும் அவற்றின் இலக்கிய நயத்தையும் விவரி :**

(a) "தலைவிக்கு மதிப்பு செய்தான்;
தாய்மைக்கு வணக்கம் செய்தான்." *20*

(b) "கையும் காலும் தூக்கத் தூக்கும் ஆடிப் பாவை போல." *15*

(c) "வென்று இவண் வருவென் என்று உரைக்கிலேன்." *15*

## SECTION B

**Q5.** **கீழ்க்காணும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் 150 சொற்களுக்கு மிகாமல் விடை தருக :** *10×5=50*

(a) கண்ணனைத் தன் சீடனாக நினைத்துப் பாரதியார் கூறுவனவற்றைத் தொகுத்தெழுதுக. *10*

(b) முத்துப்பட்டன் கதை உணர்த்தும் மானுட நெறியினை விளக்குக. *10*

(c) சித்திரப்பாவையில் சுந்தரி எனும் பாத்திரப்படைப்பினை விளக்குக. *10*

(d) மு.வ. வின் தேர்தல் குறித்த சிந்தனைகளை விவரி. *10*

(e) பாரதிதாசன் குறித்து அறிஞர் அண்ணா குறிப்பிடுவனவற்றைத் தொகுத்துரைக்க. *10*

**Q6.** (a) மானுடச்சிந்தனைகளை ஜெயகாந்தன் பதிவு செய்துள்ளதை குருபீடம் சிறுகதை ஒன்றின்வழி விவரி. *20*

(b) "சொல்வன்மை" எனும் அதிகாரத்தில் திருவள்ளுவர் கூறுவனவற்றை விவரி. *15*

(c) தொண்டுள்ளம் குறித்துக் குடும்ப விளக்கு உணர்த்துவனவற்றை விவரி. *15*

**Q7.** (a) "அன்னை ஒப்பாய் எனக்கு
அத்தன் ஒப்பாய், என் அரும்பொருளே !"
என்று மாணிக்கவாசகர் வேண்டுவனவற்றைப் புலப்படுத்துக. *20*

(b) அறிஞர் அண்ணாவின் சமுதாயச்சிந்தனைகளை விவரி. *15*

(c) நூற்றைந்து ஆண்டுகள் நல்வாழ்வு வாழ குடும்ப விளக்கு கூறும் காரணங்களை விளக்குக. *15*

Q8. (a) அறத்தின் ஆட்சி குறித்து டாக்டர் மு.வ. கூறுவனவற்றைத் தொகுத்துரைக்க. *20*

(b) மலையருவி காட்டும் தாலாட்டுப் பாடல்களின் சிறப்பினை விவரி. *15*

(c) சித்திரப்பாவையின் பாத்திரப் படைப்புகளின் சிறப்பினைத் தொகுத்துரைக்க. *15*

**STH-D-TML**

# தமிழ் / TAMIL

## தாள் II / Paper II

## (இலக்கியம்) / ( LITERATURE )

கால அளவு : **மூன்று** மணி நேரம்
*Time Allowed* : ***Three*** *Hours*

மொத்த மதிப்பெண்கள் : **250**
*Maximum Marks* : **250**

---

### வினாத்தாள் குறித்த அறிவுறுத்தல்கள்

**வினாக்களுக்கு விடையெழுத முனையுமுன் பின்வரும் அறிவுறுத்தல் ஒவ்வொன்றும் அருள்கூர்ந்து படிக்கவும் :**

மொத்தம் **எட்டு** வினாக்கள் **இரண்டு பிரிவுகளாகப்** பகுக்கபட்டுள்ளன.

மொத்தத்தில் **ஐந்து** வினாக்களுக்கு விடையளிக்கவும்.

வினாக்கள் **1, 5** ஆகியவை கட்டாயம் விடையளிக்க வேண்டியவை. எஞ்சிய வினாக்களுள் பிரிவு ஒவ்வொன்றிலும் குறைந்தது **ஒரு** வினா தெரிவுசெய்து **மூன்று** வினாக்களுக்கு விடையளிக்கவும்.

ஒரு வினா/ பகுதிக்கு உரிய மதிப்பெண் அதற்கு நேரே குறிக்கப்பட்டுள்ளது.

விடைகள் **தமிழில்** எழுதப்பட வேண்டும்.

வினாக்களில் குறிக்கப்பட்டுள்ள சொற்களின் எண்ணிக்கை வரம்பைக் கட்டாயம் பின்தொடரவேண்டும்.

விடையளிக்கப்பட்ட வினாக்கள் வரிசைமுறையில் கணக்கிடப்படும். ஒரு வினாவிற்கு ஒரு பகுதியே விடையெழுதப்பட்டிருப்பினும் அது அடிக்கப்பட்ட அவ்வினாவும் விடையளிக்கப்பட்ட வினாவாகக் கணக்கிடப்படும். வினா-விடைக் கையேட்டில் வெறுமையாக விடப்பட்ட பக்கம் அல்லது பக்கத்தின் பகுதி தெளிவாக அடிக்கப்பட வேண்டும்.

### QUESTION PAPER SPECIFIC INSTRUCTIONS

***Please read each of the following instructions carefully before attempting questions :***

*There are* ***EIGHT*** *questions divided in* ***TWO SECTIONS.***

*Candidate has to attempt* ***FIVE*** *questions in all.*

*Questions no.* ***1*** *and* ***5*** *are compulsory and out of the remaining, any* ***THREE*** *are to be attempted choosing at least* ***ONE*** *question from each section.*

*The number of marks carried by a question / part is indicated against it.*

*Answers must be written in* ***TAMIL.***

*Word limit in questions, wherever specified, should be adhered to.*

*Attempts of questions shall be counted in sequential order. Unless struck off, attempt of a question shall be counted even if attempted partly. Any page or portion of the page left blank in the Question-cum-Answer Booklet must be clearly struck off.*

---

## SECTION A

**Q1. கீழ்க்காணும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் 150 சொற்களுக்கு மிகாமல் விடை தருக :** *10×5=50*

(a) பிரிவு ஒழுக்கம் குறுந்தொகையில் எவ்வாறு பேசப்படுகிறது ? *10*

(b) அமைச்சருக்கு மொழித்திறன் எவ்வாறு அமைய வேண்டும் என்று வள்ளுவர் தெரிவிக்கிறார் ? *10*

(c) மதுரைக் காண்டத்தில் பேசப்படும் பெண் தெய்வங்களின் இயல்புகளை விவரிக்க. *10*

(d) குற்றமும் தண்டனையும் கும்பகர்ணன் வதைப்படலத்தில் எவ்வாறு மையக் கருத்தாக இருக்கிறது ? விளக்குக. *10*

(e) உலகப்பற்றுக்கும் இறைப்பற்றுக்கும் இடையில் உள்ள தன் திண்டாட்ட நிலையை மாணிக்கவாசகர் எவ்வாறு விளக்குகிறார் ? *10*

**Q2. கீழ்க்காணும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் விடை தருக :**

(a) கும்பகர்ணன் துயில் எழுப்பப்பட்ட நிகழ்வுகள் எவ்வாறு வருணிக்கப்படுகின்றன ? *20*

(b) பாண்டியன் அறிவுடை நம்பிக்குப் பிசிராந்தையார் சொன்ன அறிவுரைகள் எவை ? *15*

(c) திருமாலின் அவதாரச் சிறப்புகள் திருப்பாவையில் எவ்வாறு விவரிக்கப்படுகின்றன ? ஏன் ? *15*

**Q3.** **கீழ்க்காணும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் விடை தருக :**

(a) இளங்கோவடிகள் புலப்படுத்தும் அரசின் செயல்பாடுகள் எவை ? விளக்குக. 20

(b) அரசியலில் ஒற்றறிதலின் இன்றியமையாமையை வள்ளுவர் எவ்வாறு விளக்குகிறார் ? 15

(c) நீத்தல் விண்ணப்பத்தில் உத்தரகோச மங்கை எவ்வாறு வருணிக்கப்படுகிறது ? 15

**Q4.** **கீழ்க்காணும் பாடல் அடிகளுக்கு இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக :**

(a) "செந்தாமரைக் கையால் சீர்ஆர் வளை ஒலிப்ப
வந்து திறவாய் மகிழ்ந்து" 20

(b) "கல்பொரு திரங்கு மல்லற் பேர்யாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோல்" 15

(c) "இன்னும் பாடுக பாட்டே, அவர்
நன்னெடுங் குன்றம் பாடிய பாட்டே" 15

## SECTION B

**Q5. கீழ்க்காணும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் 150 சொற்களுக்கு மிகாமல் விடை தருக : *10×5=50***

(a) கண்ணன் பாரதியின் காதலனாகவும் காதலியாகவும் வேறுபட இருப்பதை ஒப்பிட்டு விளக்குக. *10*

(b) இயற்கையை மனித வாழ்வோடு தொடர்புபடுத்தி நா. காமராசன் எவ்வாறெல்லாம் பாடுகிறார் ? *10*

(c) ஓவியக் கலைக்கும் வணிகத்திற்கும் இடையிலான தொடர்பு அகிலனால் எவ்வாறு சித்திரிக்கப்படுகிறது ? *10*

(d) நன்றிக்கும் உரிமைக்கும் உரியதாக ராவுத்தர் பாத்திரம் சோ-வால் எவ்வாறு படைக்கப்பட்டுள்ளது ? *10*

(e) திருட்டு நாட்டுப்புறப் பாடல்களில் எவ்வாறு பதிவாகியுள்ளது ? *10*

**Q6. கீழ்க்காணும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் விடை தருக :**

(a) மதுப்பழக்கம் குறித்துக் கறுப்பு மலர்களில் வைக்கப்படும் விமர்சனங்கள் எவை ? *20*

(b) அறத்திற்கும் பணத்திற்கும் இடையிலான உறவை மு. வரதராசன் எவ்வாறு விளக்குகிறார் ? *15*

(c) பிரமீளா மீண்டும் குடும்ப வாழ்வுக்குத் திரும்புவதற்குச் சமூகம் செய்யும் முயற்சிகள் எவை ? விளக்குக. *15*

**Q7. கீழ்க்காணும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் விடை தருக :**

(a) மாமி-மருமகள் உறவு குடும்ப விளக்கில் எவ்வாறு வருணிக்கப்பட்டுள்ளது ? *20*

(b) பாரதிதாசனின் தமிழ்ப் பெருமித உணர்வு குறித்து அண்ணா தெரிவிக்கும் கருத்துகள் எவை ? *15*

(c) வருணம் மற்றும் சாதிப் பிரிவினைகள் முத்துப்பட்டன் கதையில் எவ்வாறு பதிவாகியுள்ளன ? *15*

**Q8. கீழ்க்காணும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் விடை தருக :**

(a) உரிமை குறித்து மு. வரதராசன் தெரிவிக்கும் கருத்துகள் எவை ? விளக்குக. *20*

(b) பெண்ணுடனான உறவில் ஆண்கள் ஆதிக்கம் செலுத்துவதைக் குருபீடம் சிறுகதைகள் எவ்வாறு புலப்படுத்துகின்றன ? *15*

(c) மாமன் உறவு நாட்டுப்புறப் பாடல்களில் எவ்வாறு பேசப்படுகிறது ? *15*

CS (MAIN) EXAM:2018

**EGT–D–TML**

# தமிழ்

## தாள்—II

(இலக்கியம்)

| காலஅளவு : மூன்று மணி நேரம் | மொத்த மதிப்பெண்கள் : 250 |
|---|---|

**வினாத்தாள் குறித்த அறிவுறுத்தல்கள்**

**வினாக்களுக்கு விடை எழுதத் தொடங்கும் முன் பின்வரும் அறிவுறுத்தல் ஒவ்வொன்றையும் கவனமாகப் படிக்கவும்:**

இரண்டு பிரிவுகளாகப் பகுத்து மொத்தத்தில் எட்டு வினாக்கள் தரப்பட்டுள்ளன.

அவற்றுள் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க வேண்டும்.

**1**, **5** ஆகிய வினாக்களுக்குக் கட்டாயம் விடையளிக்க வேண்டும்; எஞ்சிய வினாக்களுள் பகுதி ஒவ்வொன்றிலும் குறைந்தது ஒரு வினாவைத் தெரிவு செய்து விடையளிக்க வேண்டும். இரண்டு பகுதிகளிலும் சேர்த்து மொத்தத்தில் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க வேண்டும்.

ஒவ்வொரு வினா மற்றும் பகுதிகளுக்குரிய மதிப்பெண்கள் அவற்றுக்கு நேரே கொடுக்கப்பட்டுள்ளன.

விடைகளைக் கட்டாயம் தமிழில் மட்டுமே எழுத வேண்டும்.

வினாக்களுக்கு நேரே கொடுக்கப்பட்டுள்ள விடைதரும் சொற்களின் எண்ணிக்கை வரம்பைக் கட்டாயம் பின்பற்ற வேண்டும்.

விடையளிக்கப்பட்ட வினாக்கள் வரிசை முறையில் கணக்கிடப்படும். ஒரு வினாவிற்கு ஒரு பகுதி மட்டும் விடை எழுதப்பட்ட நிலையில் எஞ்சிய பகுதி அடிக்கப்படாமல் இருந்தால் அப்பகுதியிலிருக்கும் அடிக்கப்படாத பக்கமும் விடைப் பக்கமாகக் கருதிக் கணக்கிடப்படும். ஆகவே வினா-விடைப் புத்தகத்தில் வெறுமையாக விடப்பட்ட பக்கம் அல்லது பக்கத்தின் பகுதிகளைத் தெளிவாக அடித்துவிட வேண்டும்.

# TAMIL

## PAPER—II

( LITERATURE )

| Time Allowed : Three Hours | Maximum Marks : 250 |
|---|---|

**QUESTION PAPER SPECIFIC INSTRUCTIONS**

**Please read each of the following instructions carefully before attempting questions**

There are EIGHT questions divided in two Sections.

Candidate has to attempt FIVE questions in all.

Question Nos. **1** and **5** are compulsory and out of the remaining, THREE are to be attempted choosing at least ONE question from each Sections.

The number of marks carried by a question/part is indicated against it.

Answers must be written in TAMIL.

Word limit in questions, wherever specified, should be adhered to.

Attempts of questions shall be counted in sequential order. Unless struck off, attempt of a question shall be counted even if attempted partly. Any page or portion of the page left blank in the Question-cum-Answer Booklet must be clearly struck off.

## SECTION—A

1. கீழ்க் காணும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் *150* சொற்களுக்கு மிகாமல் விடை தருக : 10×5=50

*(a)* குறுந்தொகையில் காணப்படும் தோழி கூற்றுப்பாடல்களின் தனிச் சிறப்பைத் தெளிவுபடுத்துக.

*(b)* ''தமக்கென முயலா நோன்தாள் பிறர்க்கு என முயலுநர் உண்மையானே'' - இப்பாடல் உணர்த்தும் பண்பாட்டுப் பேருண்மையைப் புலப்படுத்துக.

*(c)* 'ஊக்கமுடைமை' என்னும் அதிகாரத்தின் வழிக்குறளாசான் உணர்த்துவனவற்றைக் குறிப்பிடுக.

*(d)* சிலப்பதிகாரப் பெருங்காப்பியத்தில் இடம் பெறும் வழக்குரை காதையின் தனித்தன்மையைக் கூறுக.

*(e)* திருப்பாவையில் காணப்படும் திருமாலின் தனிச் சிறப்புகளை எடுத்துக் கூறுக.

2. கீழ் வரும் வினா ஒவ்வொன்றிற்கும் *250* சொற்களுக்கு மிகாமல் விடை தருக :

*(a)* வீடணனின் பண்புநலன்களை விளக்குக. 20

*(b)* நாடனொடு தலைவிக்கு உள்ள நட்பை தேவகுலத்தார் எவ்வாறு வருணிக்கிறார்? 15

*(c)* தெய்வப்புலவர் உணர்த்தும் 'கல்வி'யின் அருமை பெருமைகளை எடுத்துக் காட்டுக. 15

3. கீழ் வரும் வினா ஒவ்வொன்றிற்கும் *250* சொற்களுக்கு மிகாமல் விடை தருக :

*(a)* சிலப்பதிகாரப் 'புறஞ்சேரியிறுத்த காதை' பெருங்காப்பியக்கதைப் போக்கிற்கு உதவும் பான்மையினை விளக்கியுரைக்க. 20

*(b)* நன்றி ததும்பும் பாத்திரமாகக் கும்பகருணன் படைக்கப்பட்டுள்ளமையைச் சான்று வழி நிறுவுக. 15

*(c)* மணிவாசகப் பெருமான் தன் அவலநிலையினை ''நீத்தல் விண்ணப்பத்தில்'' வெளிப்படுத்து மாற்றைத் தெரிவிக்க. 15

4. கீழ்வரும் பாடப்பகுதிகள் பயிலும் இடத்தையும், அவற்றின் இலக்கிய நயத்தையும் வெளிப்படுத்துக:

*(a)* ''காமம் செப்பாது கண்டது மொழிமோ''. 20

*(b)* ''மை இட்டு எழுதோம் மலர் இட்டு நாம் முடியோம் செய்யாதன செய்யோம் தீக்குறளைச் சென்று ஓதோம்''. 15

*(c)* ''கற்புக்கடம் பூண்ட இத்தெய்வம் அல்லது பொற்புடைத் தெய்வம் யாம் கண்டிலமால்''. 15

## SECTION—B

**5.** கீழ்க் காணும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் 150 சொற்களுக்கு மிகாமல் விடை தருக : 10×5=50

*(a)* கண்ணம்மாவைக்குழந்தையாகக் காணும் மகாகவி பாரதியின் தாய்மை உள்ளத்தைப் புலப்படுத்துக.

*(b)* 'குடும்ப விளக்கில்' புரட்சிக்கவிஞர் 'முதுயோர் காதலின்' சிறப்பை எவ்வாறு பாடுகின்றார்?

*(c)* 'கறுப்பு மலர்கள்' தமிழ்க் கவிதை உலகின் ஒரு திருப்புமுனை என்பதை விளக்குக.

*(d)* இன்றைய சமூக அவலங்களை மு.வ. எங்ஙனம் வெளிப்படுத்துகின்றார்?

*(e)* 'சித்திரப்பாவையில்' வரும் அண்ணாமலையின் பண்புநலன்கள் யாவை?

**6.** கீழ் வரும் வினா ஒவ்வொன்றிற்கும் 250 சொற்களுக்கு மிகாமல் விடை தருக :

*(a)* நல்ல சிறுகதைக்குச் சான்றாக "தவறுகள் குற்றங்கள் அல்ல" திகழ்வதை விவரிக்க. 20

*(b)* நாடக ஆசிரியர் 'சோ'வின் சமுதாயக் கண்ணோட்டத்தைக் குறிப்பிடுக. 15

*(c)* முத்துப்பட்டன் பாத்திரப்படைப்பு தெரிவிக்கும் செய்திகள் யாவை? 15

**7.** கீழ் வரும் வினா ஒவ்வொன்றிற்கும் 250 சொற்களுக்கு மிகாமல் விடை தருக :

*(a)* பாவேந்தரின் உருவப்படத்தைத் திறந்து வைத்து, அறிஞர் அண்ணா ஆற்றிய பேருரையின் தனிச்சிறப்பை விளக்குக. 20

*(b)* மு.வ. வின் உரைநடைத் திறனைச் சான்றுகளுடன் விளக்குக. 15

*(c)* தொழிலாளர் பாடல்களின் சிறப்பை கி.வா.ஜ. எங்ஙனம் காட்டுகின்றார்? 15

**8.** கீழ் வரும் வினா ஒவ்வொன்றிற்கும் 250 சொற்களுக்கு மிகாமல் விடை தருக :

*(a)* உலகியலைப் பாடவல்லவர் பாரதி என்பதை, "கண்ணன் என் தோழன்" என்ற பாடல்வழி விளக்குக. 20

*(b)* பாவேந்தர் காண விழையும் சமுதாய மாற்றங்கள் யாவை? 15

*(c)* மாறி வரும் சமுதாய நடைமுறைகளை அகிலன் எவ்வாறு எடுத்துக் காட்டுகின்றார்? 15

* * *

CS (Main) Exam,2019

SDF-B-TML

# தமிழ் / TAMIL

## தாள் II / Paper II

## (இலக்கியம்) / ( LITERATURE )

| | |
|---|---|
| கால அளவு : **மூன்று** மணி நேரம் | மொத்த மதிப்பெண்கள் : **250** |
| *Time Allowed : **Three** Hours* | *Maximum Marks : **250*** |

## வினாத்தாள் குறித்த அறிவுறுத்தல்கள்

**வினாக்களுக்கு விடையெழுத முனையுமுன் பின்வரும் அறிவுறுத்தல் ஒவ்வொன்றும் அருள்கூர்ந்து படிக்கவும் :**

மொத்தம் **எட்டு** வினாக்கள் **இரண்டு பிரிவுகளாகப்** பகுக்கபட்டுள்ளன.

மொத்தத்தில் **ஐந்து** வினாக்களுக்கு விடையளிக்கவும்.

வினாக்கள் **1, 5** ஆகியவை கட்டாயம் விடையளிக்க வேண்டியவை. எஞ்சிய வினாக்களுள் பிரிவு ஒவ்வொன்றிலும் குறைந்தது **ஒரு** வினா தெரிவு செய்து **மூன்று** வினாக்களுக்கு விடையளிக்கவும்.

ஒரு வினா/ பகுதிக்கு உரிய மதிப்பெண் அதற்கு நேரே குறிக்கப்பட்டுள்ளது.

விடைகள் **தமிழில்** எழுதப்பட வேண்டும்.

வினாக்களில் குறிக்கப்பட்டுள்ள சொற்களின் எண்ணிக்கை வரம்பைக் கட்டாயம் பின்தொடர வேண்டும்.

விடையளிக்கப்பட்ட வினாக்கள் வரிசைமுறையில் கணக்கிடப்படும். ஒரு வினாவிற்கு ஒரு பகுதியே விடையெழுதப்பட்டிருப்பினும் அது அடிக்கப்பட்ட அவ்வினாவும் விடையளிக்கப்பட்ட வினாவாகக் கணக்கிடப்படும். வினா-விடைக் கையேட்டில் வெறுமையாக விடப்பட்ட பக்கம் அல்லது பக்கத்தின் பகுதி தெளிவாக அடிக்கப்பட வேண்டும்.

## QUESTION PAPER SPECIFIC INSTRUCTIONS

***Please read each of the following instructions carefully before attempting questions :***

*There are **EIGHT** questions divided in **TWO SECTIONS**.*

*Candidate has to attempt **FIVE** questions in all.*

*Questions no. **1** and **5** are compulsory and out of the remaining, any **THREE** are to be attempted choosing at least **ONE** question from each section.*

*The number of marks carried by a question / part is indicated against it.*

*Answers must be written in **TAMIL**.*

*Word limit in questions, wherever specified, should be adhered to.*

*Attempts of questions shall be counted in sequential order. Unless struck off, attempt of a question shall be counted even if attempted partly. Any page or portion of the page left blank in the Question-cum-Answer Booklet must be clearly struck off.*

## SECTION A

**Q1.** **கீழ்க்காணும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் 150 சொற்களுக்கு மிகாமல் விடை தருக :** *10×5=50*

(a) கொடைப் பண்பு குறித்துப் புற நானூறு தெரிவிக்கும் கருத்துகள் எவை ? விளக்குக. *10*

(b) செங்கோன்மை பற்றிய குறள் கருத்துகளைத் தொகுத்து மதிப்பிடுக. *10*

(c) கோவலனின் கடந்த கால வாழ்வு குறித்து மாடல மறையோன் தெரிவிக்கும் கருத்துகள் எவை ? *10*

(d) கும்ப கருணன் வதைப் படலத்தில் பேசப்படும் அறச்சிக்கல்களும் அவற்றிற்கான தீர்வுகளும் எவை ? விளக்குக. *10*

(e) மனித உடல் பற்றிய மாணிக்கவாசகரின் கருத்துகள் எவை ? ஆராய்க. *10*

**Q2.** (a) குறுந்தொகையில் பேசப்படும் தாவரங்கள் எவை ? அவை ஏன் பேசப்படுகின்றன ? ஆராய்க. *20*

(b) இளங்கோ வருணிக்கும் மதுரை நகரின் அமைப்பு எவ்வாறானது ? விளக்குக. *15*

(c) காலை நேரம் திருப்பாவையில் எவ்வாறு வருணிக்கப்படுகிறது ? விளக்குக. *15*

**Q3.** (a) உருவ வருணனை வாயிலாக சிவபெருமான் பற்றிய புராணக் கதைகள் எவ்வாறு மாணிக்க வாசகரால் நினைவு கூறப்படுகின்றன ? ஆராய்க. *20*

(b) கும்பகருணன் வதைப் படலத்தில் மகோதரன் என்ற பாத்திரம் பெறும் முக்கியத்துவம் யாது ? விளக்குக. *15*

(c) குற்றங் கடிதல் பற்றி வள்ளுவர் தெரிவிக்கும் கருத்துகள் எவை ? விளக்குக. *15*

**Q4.** **கிழ்க்காணும் பாடலடிகளின் இடத்தையும் நயத்தையும் விளக்குக :** ***20+15+15=50***

(a) "ஏற்றக் கலங்கள் எதிர்பொங்கி மீது அளிப்ப
மாற்றாதே பால்சொரியும் வள்ளல் பெரும் பசுக்கள்" *20*

(b) "நல்லது செய்தல் ஆற்றீராயினும்
அல்லது செய்தல் ஓம்புமின்" *15*

(c) "சிறுகோட்டுப் பெரும்பழம் தூங்கி ஆங்கு" *15*

## SECTION B

**Q5.** **கீழ்க்காணும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் 150 சொற்களுக்கு மிகாமல் விடை தருக :** *10×5=50*

(a) கண்ணனைத் தந்தையாகக் கருதிப் பாரதியார் கூறுவன எவை ? விளக்குக. *10*

(b) நாடகவியல் துறை எவ்வாறு இருக்க வேண்டும் என்று அண்ணா அறிவுறுத்துகிறார் ? *10*

(c) எதிர்ப்பண்புப் பாத்திரங்களை அகிலன் எவ்வாறு படைத்துள்ளார் ? விளக்குக. *10*

(d) மதங்களைக் கடந்து குடும்ப நலன்களும் சமூக நலன்களும் காக்கப்படுவது 'யாருக்கும் வெட்கமில்லை' நாடகத்தில் எவ்வாறு விவரிக்கப்பட்டுள்ளது ? விளக்குக. *10*

(e) மாடுகள் பாடுபொருளாக இருப்பதை நாட்டுப்புறப் பாடல்கள் கொண்டு விவரி ? *10*

**Q6.** (a) 'குடும்ப விளக்கு' என்ற நூல் தலைப்பின் பொருள் சிறப்பை விளக்குக. *20*

(b) மு.வ. பேசும் பொருளாதாரக் கருத்துகள் எவை ? அறத்துடன் அவை எவ்வாறு தொடர்பு-படுகின்றன ? *15*

(c) ஆநிரை கவர்தலும் ஆநிரை மீட்டலும் என்ற தமிழர் போர் மரபு முத்துப்பட்டன் கதைப்பாடலில் எவ்வாறு பொருந்துகிறது ? விளக்குக. *15*

**Q7.** (a) “காகிதப் பூக்கள்” என்ற கவிதையின் நயங்களை விவரி. *20*

(b) நிக்கி என்ற நாய் மூலம் பொருளாதார - வர்க்க வேறுபாடுகள் எவ்வாறு விவரிக்கப்படுகின்றன ? *15*

(c) நாட்டுப்புறப் பாடல்களில் அவலச்சுவை இடம் - பெறுவதற்கான சூழல்கள் எவை ? விளக்குக. *15*

**Q8.** (a) பாரதியார் குறிப்பிடும் சேவகனின் இயல்புகள் எவை ? பக்தி நெறியுடன் அவை எவ்வாறு பொருந்தி அமைகின்றன ? ஆராய்க. *20*

(b) காதல் உறவின் தன்மைகள் சித்திரப் பாவையில் எவ்வாறு பேசப்படுகின்றன ? விளக்குக. *15*

(c) ஆன்மீகம் சிறுகதைப் பொருளாகியுள்ளதை குருபீடம் கதைகள் கொண்டு விளக்குக. *15*

CS (Main) Exam, 2020

URC-B-TML

# தமிழ் / TAMIL

## தாள் II / Paper II

## (இலக்கியம்) / ( LITERATURE )

காலஅளவு : **மூன்று** மணி நேரம்
*Time Allowed : **Three Hours***

மொத்த மதிப்பெண்கள் : **250**
*Maximum Marks : **250***

---

### வினாத்தாள் குறித்த அறிவுறுத்தல்கள்

**வினாக்களுக்கு விடையெழுத முனையுமுன் பின்வரும் அறிவுறுத்தல் ஒவ்வொன்றும் அருள்கூர்ந்து படிக்கவும் :**

மொத்தம் **எட்டு** வினாக்கள் **இரண்டு பிரிவுகளாகப்** பகுக்கபட்டுள்ளன.

மொத்தத்தில் **ஐந்து** வினாக்களுக்கு விடையளிக்கவும்.

வினாக்கள் ***1, 5*** ஆகியவை கட்டாயம் விடையளிக்க வேண்டியவை. எஞ்சிய வினாக்களுள் பிரிவு ஒவ்வொன்றிலும் குறைந்தது **ஒரு** வினா தெரிவு செய்து **மூன்று** வினாக்களுக்கு விடையளிக்கவும்.

ஒரு வினா/ பகுதிக்கு உரிய மதிப்பெண் அதற்கு நேரே குறிக்கப்பட்டுள்ளது.

விடைகள் **தமிழில்** எழுதப்பட வேண்டும்.

வினாக்களில் குறிக்கப்பட்டுள்ள சொற்களின் எண்ணிக்கை வரம்பைக் கட்டாயம் பின்தொடர வேண்டும்.

விடையளிக்கப்பட்ட வினாக்கள் வரிசைமுறையில் கணக்கிடப்படும். ஒரு வினாவிற்கு ஒரு பகுதியே விடையெழுதப்பட்டிருப்பினும் அது அடிக்கப்பட்ட அவ்வினாவும் விடையளிக்கப்பட்ட வினாவாகக் கணக்கிடப்படும். வினா-விடைக் கையேட்டில் வெறுமையாக விடப்பட்ட பக்கம் அல்லது பக்கத்தின் பகுதி தெளிவாக அடிக்கப்பட வேண்டும்.

### QUESTION PAPER SPECIFIC INSTRUCTIONS

***Please read each of the following instructions carefully before attempting questions :***

*There are **EIGHT** questions divided in **TWO SECTIONS**.*

*Candidate has to attempt **FIVE** questions in all.*

*Questions no. **1** and **5** are compulsory and out of the remaining, any **THREE** are to be attempted choosing at least **ONE** question from each section.*

*The number of marks carried by a question / part is indicated against it.*

*Answers must be written in **TAMIL**.*

*Word limit in questions, wherever specified, should be adhered to.*

*Attempts of questions shall be counted in sequential order. Unless struck off, attempt of a question shall be counted even if attempted partly. Any page or portion of the page left blank in the Question-cum-Answer Booklet must be clearly struck off.*

---

## SECTION A

**Q1. கீழ்க்காணும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் 150 சொற்களுக்கு மிகாமல் விடை தருக :** *10×5=50*

(a) குறிஞ்சித் திணையின் நில அடையாளம் யாது ? இரண்டு குறுந்தொகைப் பாடல்கள் வழி அவ்வடையாளம் வெளிப்படுவதைக் காட்டுக. *10*

(b) பொருண்மொழிக் காஞ்சி என்றால் என்ன ? நும் பாடப்பகுதி கொண்டு விளக்குக. *10*

(c) கும்பகருணனை எழுப்பச் சென்ற கிங்கிரர் வெகுளியால் கூறுவனவற்றை எடுத்துரைக்க. *10*

(d) நீத்தல் விண்ணப்பம் வேண்டி மாணிக்கவாசகர் முன் வைக்கும் வேண்டுதலை இரண்டு பாடல்கள் வழி விளக்குக. *10*

(e) தெய்வப் புலவர் கடை அறிவுடைமையின் தனித்தன்மைளை விளக்குக. *10*

**Q2.** (a) மாதவி கோவலனுக்கு எழுதிய முடங்கலின் சிறப்பினை எடுத்துரைக்க. *20*

(b) திருப்பாவையில் பொதிந்து கிடக்கும் தமிழ் அழகியல் கூறுகளை வெளிப்படுத்துக. *15*

(c) பாரி மகளிரை விச்சிக்கோனுழைக் கொண்டு சென்ற கபிலர் கூற்றை விவரிக்க. *15*

**Q3.** (a) கண்ணகி தனது வழக்குரையில் கூறிய நீதி நுட்பங்களை எடுத்துரைக்க. *20*

(b) திருக்குறள் கூறும் மேலாண்மையியல் சிந்தனைகளை நும் பாடப்பகுதிக் கொண்டு விளக்குக. *15*

(c) குறுந்தொகைப் பாலைத்திணையில் தலைவி மற்றும் தோழி எவ்வாறு சித்தரிக்கப்படுகிறார்கள். *15*

**Q4.** **கிழ்க்காணும் பாடலடிகளின் இடம், பொருள் மற்றும் நயத்தையும் விளக்குக :**

(a) "கள்ளச் சகடம் கலக்கு அழியக் கால் ஓச்சி
வெள்ளத்து அரவிந் துயில் அமர்ந்த வித்தினை" *20*

(b) "மடைமாண் செப்பில் தமிய வைகிய
பொய்யாப் பூவின் மெய் சாயினளே" *15*

(c) "கூற்றமும் நின்றது, எம்மைக்
கொல்லிய விதியும் நின்ற" *15*

## SECTION B

**Q5. கீழ்க்காணும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் 150 சொற்களுக்கு மிகாமல் விடை தருக :** *10×5=50*

(a) கண்ணன் - என் தோழனின் தனித்துவத்தைப் புலப்படுத்துக. *10*

(b) குடும்ப விளக்கில் தனி இல்லம் குறித்த நகைமுத்துவின் கருத்தை எடுத்துரைக்க. *10*

(c) பிச்சைக்காரனின் தோற்றத்தையும் இயல்பையும் ஜெயகாந்தன் எவ்வாறு வருணிக்கிறார் ? *10*

(d) மு. வரதராசனார் குறுகிய நோக்கங்களாகக் கூறுவனவற்றை எடுத்துக் காட்டுக. *10*

(e) தமிழக நாட்டுப்புற நம்பிக்கைகள் வழி அறியலாகும் தமிழர் அறிவியல் அறிவு மரபை வெளிப்படுத்துக. *10*

**Q6.** (a) 'யாருக்கும் வெட்கமில்லை' நாடகத்தில் வெளிப்படும் நகைச்சுவை உணர்வை விவரிக்க. *20*

(b) 'முத்துப்பட்டன் கதை' வெளிப்படுத்தும் சமூகப் புரட்சிச் சிந்தனைகளை வெளிப்படுத்துக. *15*

(c) முதியோர் நிலையை நா. காமராசன் எவ்வாறு காட்டுகிறார் ? *15*

**Q7.** (a) ‘சித்திரப்பாவை’யில் கையாளப்பட்டிருக்கும் பெண்ணியச் சிந்தனைகளை விளக்குக. *20*

(b) கண்ணன் பாட்டை மாற்றுக் கோணத்தில் திறனாய்வு செய்து ஒரு கட்டுரை எழுதுக. *15*

(c) கம்பர், இளங்கோ, வள்ளுவர் ஆகியோர் குறித்து அறிஞர் அண்ணா கூறியதை எடுத்துரைக்க. *15*

**Q8.** (a) குடும்ப விளக்கில் காணும் நான்கு தலைமுறைகள் குறித்து ஒரு கட்டுரை வரைக. *20*

(b) ஒரு பிச்சைக்காரன் குருவான கதையை ஜெயகாந்தன் எவ்வாறு எடுத்துரைக்கிறார் ? *15*

(c) காகிதப் பூக்களாக நா. காமராசன் குறிப்பிடுவோர் பற்றி ஒரு கட்டுரை வரைக. *15*

CS (Main) Exam,2021

HXS-B-TML

# தமிழ் / TAMIL

## தாள் II / Paper II

## (இலக்கியம்) / ( LITERATURE )

| | |
|---|---|
| கால அளவு : **மூன்று** மணி நேரம்<br>*Time Allowed : **Three** Hours* | மொத்த மதிப்பெண்கள் : **250**<br>*Maximum Marks : **250*** |

### வினாத்தாள் குறித்த அறிவுறுத்தல்கள்

**வினாக்களுக்கு விடையெழுத முனையுமுன் பின்வரும் அறிவுறுத்தல் ஒவ்வொன்றும் அருள்கூர்ந்து படிக்கவும் :**

மொத்தம் **எட்டு** வினாக்கள் **இரண்டு பிரிவுகளாகப்** பகுக்கபட்டுள்ளன.

மொத்தத்தில் **ஐந்து** வினாக்களுக்கு விடையளிக்கவும்.

வினாக்கள் **1, 5** ஆகியவை கட்டாயம் விடையளிக்க வேண்டியவை. எஞ்சிய வினாக்களுள் பிரிவு ஒவ்வொன்றிலும் குறைந்தது **ஒரு** வினா தெரிவு செய்து **மூன்று** வினாக்களுக்கு விடையளிக்கவும்.

ஒரு வினா/ பகுதிக்கு உரிய மதிப்பெண் அதற்கு நேரே குறிக்கப்பட்டுள்ளது.

விடைகள் **தமிழில்** எழுதப்பட வேண்டும்.

வினாக்களில் குறிக்கப்பட்டுள்ள சொற்களின் எண்ணிக்கை வரம்பைக் கட்டாயம் பின்தொடர வேண்டும்.

விடையளிக்கப்பட்ட வினாக்கள் வரிசைமுறையில் கணக்கிடப்படும். ஒரு வினாவிற்கு ஒரு பகுதியே விடையெழுதப்பட்டிருப்பினும் அது அடிக்கப்பட்ட அவ்வினாவும் விடையளிக்கப்பட்ட வினாவாகக் கணக்கிடப்படும். வினா-விடைக் கையேட்டில் வெறுமையாக விடப்பட்ட பக்கம் அல்லது பக்கத்தின் பகுதி தெளிவாக அடிக்கப்பட வேண்டும்.

### QUESTION PAPER SPECIFIC INSTRUCTIONS

***Please read each of the following instructions carefully before attempting questions :***

*There are **EIGHT** questions divided in **TWO SECTIONS**.*

*Candidate has to attempt **FIVE** questions in all.*

*Questions no. **1** and **5** are compulsory and out of the remaining, any **THREE** are to be attempted choosing at least **ONE** question from each section.*

*The number of marks carried by a question / part is indicated against it.*

*Answers must be written in **TAMIL**.*

*Word limit in questions, wherever specified, should be adhered to.*

*Attempts of questions shall be counted in sequential order. Unless struck off, attempt of a question shall be counted even if attempted partly. Any page or portion of the page left blank in the Question-cum-Answer Booklet must be clearly struck off.*

## SECTION A

**Q1.** **கீழ்க்காணும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் 150 சொற்களுக்கு மிகாமல் விடை தருக :** *10×5=50*

(a) தலைவியின் பிரிவுத்துயர் குறுந்தொகையில் உவமை நயத்தோடு எவ்விதம் கூறப்படுகிறது ? *10*

(b) நல்லாற்றுப்படூஉம் நெறியாக நரிவெரூஉத்தலையார் கூறுவன யாவை ? *10*

(c) மாணிக்கவாசகர் தன் அவல நிலையை இறைவன் முன் முறையிடும் பாங்கினை எழுதுக ? *10*

(d) சிலப்பதிகாரத்தில் ஆயர் வாழ்வு எவ்வாறு வருணிக்கப்படுகிறது ? *10*

(e) வினைசெயல் வகை அதிகாரத்தில் வள்ளுவர் கூறும் கருத்துக்களைத் தொகுத்து வரைக. *10*

**Q2.** (a) வேந்தனின் கடமைகளை மோசிகீரனாரும் அரசாளும் முறையை இளந்திரையனாரும் எவ்வாறு கூறியுள்ளனர் ? *20*

(b) வையை நதி மற்றும் மதுரைக் கோட்டை வாயில் வருணனையில் காணும் உள்ளுறைச் செய்திகளை எழுதுக. *15*

(c) கும்பகருணனுக்கும் சுக்கிரிவனுக்கும் நிகழும் போரினை விவரி ? *15*

**Q3.** (a) செஞ்சோற்றுக் கடன் கழித்த செம்மலாக கும்பகருணனின் பாத்திரப்படைப்பு எவ்வாறு சிறப்பிக்கப்பட்டுள்ளது ? *20*

(b) பாவை நோன்பின் பயன்கள் யாவை ? விளக்கு. *15*

(c) அமைச்சரின் இலக்கணமாக வள்ளுவர் கூறுவன யாவை ? *15*

**Q4.** (a) "உகிர் நுதி புரட்டும் ஓசை போலச்
செங்கால் பல்லி தன் துணை பயிறும் . . . "
– கூற்றுச் சூழலை அடிக் கருத்துடன் விவரி. *20*

(b) "தேவாதி தேவனைச் சென்று நாம் சேவித்தால்
ஆவா என்று ஆராய்ந்து அருள் . . ."
– கூற்றுச் சூழலை அடிக் கருத்துடன் விவரி. *15*

(c) "அடற்கரிபோல் ஐம்புலன்களுக்கஞ்சி அழிந்தஎன்னை;
விடற்கரியாய் விட்டிடுதி கண்டாய்"
– கூற்றுச் சூழலை அடிக் கருத்துடன் விவரி. *15*

## SECTION B

**Q5. கீழ்க்காணும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் 150 சொற்களுக்கு மிகாமல் விடை தருக :** *10×5=50*

(a) பாவேந்தர் தான் விரும்பும் பெண்ணிய மாற்றங்களைக் குடும்ப விளக்கில் எவ்வாறு வெளிப்படுத்துகிறார் ? *10*

(b) கறுப்பு மலர்கள் எனும் நூல் கைம்பெண்கள், ஏழைகள் போன்ற விளிம்புநிலை மக்களை எவ்வாறு சித்தரிக்கிறது ? *10*

(c) 'சித்திரப்பாவை' நாவல் ஓவியக்கலை அழிந்து வருவதை எப்படிச் சித்தரிக்கிறது ? *10*

(d) முத்துப்பட்டனின் திருமணம் சமூகத் தடைகளை மீறி எவ்வாறு நிகந்தேறியது ? *10*

(e) ஜெயகாந்தன் சிறுகதைகளின் மொழி நடையினை ஆராய்க ? *10*

**Q6.** (a) கண்ணனைத் தாயாகவும் தந்தையாகவும் பாரதி எவ்வாறு காண்கிறார் ? *20*

(b) தமிழகத்தின் தாழ்ந்த நிலையை அண்ணா எவ்வாறு சாடுகிறார் ? *15*

(c) 'சுண்டெலிப் பெண்ணே' என விளித்து 'மலையருவி' யில் பெண்ணுக்குக் கூறும் அறிவுரைகள் யாவை ? *15*

**Q7.** (a) முத்துப்பட்டன் கதையில் காணும் நாட்டுப்புற வழக்காறுகளை ஆராய்க. *20*

(b) விளையாட்டுப் பிள்ளையாகக் கண்ணனை பாரதி எவ்வாறு போற்றுகிறார் ? *15*

(c) ஜெயகாந்தன் சிறுகதைகளில் மையக் கருத்துகளாக இருப்பவை எவை ? விளக்கு. *15*

**Q8.** (a) குடும்ப விளக்கில் தமிழ் உணர்வு குறித்த தம் கருத்துகளைப் பாவேந்தர் எவ்விதம் நிலைநாட்டுகிறார் ? *20*

(b) தேர்தல் முறை பற்றிய மு.வ.வின் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக ? *15*

(c) ‘யாருக்கும் வெட்கமில்லை’ எனும் நாடகத்தில் சோ யாரைச் சாடுகிறார் ? ஏன் ? *15*

# தமிழ் / TAMIL

## தாள் II / Paper II

## (இலக்கியம்) / (LITERATURE)

| | |
|---|---|
| கால அளவு : **மூன்று** மணி நேரம் | மொத்த மதிப்பெண்கள் : **250** |
| *Time Allowed : **Three** Hours* | *Maximum Marks : **250*** |

## வினாத்தாள் குறித்த அறிவுறுத்தல்கள்

**வினாக்களுக்கு விடையெழுதும், முன்பாகப் பின்வரும் அறிவுறுத்தல் ஒவ்வொன்றுயும் அருள்கூர்ந்து படிக்கவும் :**

மொத்தம் **எட்டு** வினாக்கள் **இரண்டு பிரிவுகளாகப்** பகுக்கபட்டுள்ளன.

மொத்தத்தில் **ஐந்து** வினாக்களுக்கு விடையளிக்கவும்.

வினாக்கள் **1, 5** ஆகியவை கட்டாயம் விடையளிக்க வேண்டியவை. எஞ்சிய வினாக்களுள் பிரிவு ஒவ்வொன்றிலும் குறைந்தது **ஒரு** வினா தெரிவு செய்து **மூன்று** வினாக்களுக்கு விடையளிக்கவும்.

ஒரு வினா/ பகுதிக்கு உரிய மதிப்பெண் அதற்கு நேரே குறிக்கப்பட்டுள்ளது.

விடைகள் **தமிழில்** எழுதப்பட வேண்டும்.

வினாக்களில் குறிக்கப்பட்டுள்ள சொற்களின் எண்ணிக்கை வரம்பைக் கடைப்பிடித்தல் வேண்டும்.

விடையளிக்கப்பட்ட வினாக்கள் வரிசைமுறையில் கணக்கிடப்படும். ஒரு வினாவிற்கு ஒரு பகுதியே விடையெழுதப்பட்டிருப்பினும் அது அடிக்கப்பட்ட அவ்வினாவும் விடையளிக்கப்பட்ட வினாவாகக் கணக்கிடப்படும். விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்ட பக்கம் அல்லது பக்கத்தின் பகுதி தெளிவாக அடிக்கப்பட வேண்டும்.

## QUESTION PAPER SPECIFIC INSTRUCTIONS

***Please read each of the following instructions carefully before attempting questions :***

*There are **EIGHT** questions divided in **TWO SECTIONS**.*

*Candidate has to attempt **FIVE** questions in all.*

*Questions no. **1** and **5** are compulsory and out of the remaining, any **THREE** are to be attempted choosing at least **ONE** question from each section.*

*The number of marks carried by a question / part is indicated against it.*

*Answers must be written in **TAMIL**.*

*Word limit in questions, wherever specified, should be adhered to.*

*Attempts of questions shall be counted in sequential order. Unless struck off, attempt of a question shall be counted even if attempted partly. Any page or portion of the page left blank in the Question-cum-Answer Booklet must be clearly struck off.*

## SECTION A

**Q1.** **பின்வரும் வினா ஒவ்வொன்றிற்கும் 150 சொற்களுக்கு மிகாமல் விடை தருக :** *10×5=50*

(a) மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் "செல்வத்துப் பயனே ஈதல்" என்று எதனால் வலியுறுத்துகிறார். *10*

(b) அரசனுக்கு இருக்க வேண்டிய மாண்புகளைத் திருக்குறள்வழி விளக்குக. *10*

(c) இளங்கோவடிகள் வையையைத் தற்குறிப்பேற்றம் அமைய எங்ஙனம் காட்சிப்படுத்துகிறார். *10*

(d) இராவணன் பூதலம் என்னும் நங்கைதன்னையே நோக்கிப் புக்கதேன் ? விளக்குக. *10*

(e) மழையை ஆண்டாள் எவ்வாறு பாடுகிறார் ? *10*

**Q2.** (a) கும்பகருணனின் பண்புநலன்களைப் புலப்படுத்துக. *20*

(b) குறுந்தொகையில் இடம்பெறும் வரலாற்றுக் குறிப்புகளை விளக்குக. *15*

(c) இறைவனிடம் மாணிக்கவாசகர் வேண்டுவன யாவை ? விளக்குக. *15*

**Q3.** (a) காதலால் கடவுளை அடையலாம் என்று காட்டியவர் ஆண்டாள் என்னும் கருத்தினை ஆராய்க. *20*

(b) இளங்கோவடிகள் காட்சிப்படுத்தும் மதுரை நகரின் அமைப்பு குறித்து எழுதுக. *15*

(c) சோழன் நல்லுருத்திரன் இயற்றிய புறநானூற்றுப் பாடலின் திணை, துறைகளை விளக்கி அப்பாடலின் சிறப்பை மதிப்பிடுக. *15*

**Q4.** **பின்வருவனவற்றிற்கு இடம், பொருள், நயம் முதலியவற்றை விளக்குக :**

(a) அருந்திறல் பிரிந்த அயோத்தி போலப்
பெரும்பெயர் மூதூர் பெரும்பே துற்றதும் *20*

(b) யானை புக்க புலம்போலத்
தானும் உண்ணான் உலகமும் கெடுமே *15*

(c) பொறுப்பார் அன்றே பெரியோர் சிறுநாய்கள் தம்
பொய்யினையே *15*

## SECTION B

**Q5. பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் 150 சொற்களுக்கு மிகாமல் விடை தருக :** *10×5=50*

(a) கண்ணம்மாவைக் குழந்தையாகக் கண்டு பாரதியார் உரைப்பனவற்றை விளக்குக. *10*

(b) ‘வாழ்வின் வீடு’ எது என்று பாரதிதாசன்வழி நின்று விளக்குக. *10*

(c) அண்ணாமலையின் அப்பாவித்தனத்தை அகிலன் எவ்வாறு வெளிப்படுத்துகிறார் ? *10*

(d) மலையருவிவழி அறியலாகும் தாலாட்டுப் பாடலின் பொது இயல்புகளைப் புலப்படுத்துக. *10*

(e) நா. காமராசனின் கருப்பு மலர்கள் புதுக்கவிதையில் செய்த மாற்றங்களை எடுத்துரைக்க. *10*

**Q6.** (a) சி.என். அண்ணாதுரை தம் காலத் தமிழக நிலையாகச் சுட்டுவனவற்றை எழுதுக. *20*

(b) குரு - சீடன் உரையாடல்வழி ஜெயகாந்தன் உணர்த்துவன யாவை ? *15*

(c) மலையருவியில் தாது வருடப் பஞ்சம் எங்ஙனம் வெளிப்பட்டுள்ளது. *15*

**Q7.** (a) முத்துப்பட்டனின் ஆளுமைகளை மதிப்பிடுக. *20*

(b) ஜெயகாந்தன் சிறுகதைகளின் உவமைச் சிறப்பை விளக்குக. *15*

(c) புரட்சி மனப்பான்மையைத் தீய்த்தவை குறித்து அண்ணா கூறுவன யாவை ? *15*

**Q8.** (a) யாருக்கும் வெட்கமில்லைவழி வெளிப்படும் எள்ளல் சுவையை விளக்குக. *20*

(b) உரிமைப் பஞ்சம் பற்றிய மு.வ.வின் பார்வையைப் புலப்படுத்துக. *15*

(c) நாட்டுப்புறப் பாடல்களில் பழமொழிகள் ஆளப்படும் பான்மையினை மலையருவிவழிநின்று விளக்குக. *15*

# தமிழ் / TAMIL

## தாள் II / Paper II

## (இலக்கியம்) / (LITERATURE)

| | |
|---|---|
| கால அளவு : **மூன்று** மணி நேரம் | மொத்த மதிப்பெண்கள் : **250** |
| *Time Allowed : **Three** Hours* | *Maximum Marks : **250*** |

## வினாத்தாள் குறித்த அறிவுறுத்தல்கள்

**வினாக்களுக்கு விடையெழுதும், முன்பாகப் பின்வரும் அறிவுறுத்தல்களை அருள்கூர்ந்து படிக்கவும் :**

மொத்தம் **எட்டு** வினாக்கள் **இரண்டு பிரிவுகளாகப்** பகுக்கபட்டுள்ளன.

மொத்தத்தில் **ஐந்து** வினாக்களுக்கு விடையளிக்கவும்.

வினாக்கள் **1, 5** ஆகியவை கட்டாயம் விடையளிக்க வேண்டியவை. எஞ்சிய வினாக்களுள் பிரிவு ஒவ்வொன்றிலும் குறைந்தது **ஒரு** வினா தெரிவு செய்து **மூன்று** வினாக்களுக்கு விடையளிக்கவும்.

ஒரு வினா/பகுதிக்கு உரிய மதிப்பெண் அதற்கு நேரே குறிக்கப்பட்டுள்ளது.

விடைகள் **தமிழில்** எழுதப்பட வேண்டும்.

வினாக்களில் குறிக்கப்பட்டுள்ள சொற்களின் எண்ணிக்கை வரம்பைக் கடைப்பிடித்தல் வேண்டும்.

விடையளிக்கப்பட்ட வினாக்கள் வரிசைமுறையில் கணக்கிடப்படும். ஒரு வினாவிற்கு ஒரு பகுதியே விடையெழுதப்பட்டிருப்பினும் கோடு இடப்பட்ட அவ்வினாவும் விடையளிக்கப்பட்ட வினாவாகக் கணக்கிடப்படும். விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்ட பக்கம் அல்லது பக்கத்தின் பகுதி தெளிவாகக் கோடு இடப்பட வேண்டும்.

## QUESTION PAPER SPECIFIC INSTRUCTIONS

***Please read each of the following instructions carefully before attempting questions :***

*There are **EIGHT** questions divided in **TWO SECTIONS**.*

*Candidate has to attempt **FIVE** questions in all.*

*Questions no. **1** and **5** are compulsory and out of the remaining, any **THREE** are to be attempted choosing at least **ONE** question from each section.*

*The number of marks carried by a question / part is indicated against it.*

*Answers must be written in **TAMIL**.*

*Word limit in questions, wherever specified, should be adhered to.*

*Attempts of questions shall be counted in sequential order. Unless struck off, attempt of a question shall be counted even if attempted partly. Any page or portion of the page left blank in the Question-cum-Answer Booklet must be clearly struck off.*

## SECTION A

**Q1. பின்வரும் வினா ஒவ்வொன்றிற்கும் 150 சொற்களுக்கு மிகாமல் விடை தருக :** ***10×5=50***

(a) இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறனைப் பற்றி வண்ணக்கன் பேரி சாத்தனார் கூறுவன யாவை ? *10*

(b) காலம் அறிந்து செயலாற்றுமாறு வள்ளுவர் ஏன் வலியுறுத்து கிறார் ? *10*

(c) துன்பமாலையில் கண்ணகியின் அவலம் எவ்வாறு விவரிக்கப்படுகிறது ? *10*

(d) கும்பகருணன் வதைப் படலத்தில் பேசப்படும் போர்க் கருவிகள் யாவை ? *10*

(e) ஆயர்கள் வாழ்வு திருப்பாவையில் எவ்வாறு எடுத்துரைக்கப்படுகிறது ? *10*

**Q2. பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.**

(a) குறுந்தொகையில் பேசப்படும் பரத்தமை ஒழுக்கதினை மதிப்பிடுக. *20*

(b) பாண்டிய மன்னனின் நற்பண்புகளாக இளங்கோவடிகள் கூறுவன வற்றைத் தொகுத்துரைக்க. *15*

(c) மாணிக்கவாசகர் தன் புலன் இன்பங்களைக் குற்றமாகக் கருதுவதற்கான காரணங்களை ஆய்ந்துரைக்க. *15*

**Q3. பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.**

(a) பரிசில் பெறாத ஆவூர் மூலங்கிழார் தன் உள்ளக் குமுறலை எவ்வாறு புலப்படுத்துகிறார் ? *20*

(b) போர்புரிகிறவர்கள் விரிவாக உரையாடிக் கொள்வதற்கான காரணத்தைக் கம்பராமாயணத்தின் வழி விவரிக்க. *15*

(c) திருமாலின் உருவத்தை ஆண்டால் வருணிக்கும் திறத்தை விரித்துரைக்க. *15*

**Q4. பின்வருவனவற்றிற்கு இடம், பொருள், நயம் தருக :**

(a) “தண்ணம் துறைவன் கொடுமை
நம்முன் நாணிக் கரப்பாடும் மே” *20*

(b) “அடிகள் முன்னர் யான் அடி வீழ்ந்தேன்
வடியாக் கிளவி மனக் கொளல் வேண்டும்.” *15*

(c) “உண்பது நாழி; உடுப்பவை இரண்டே; பிறவும் எல்லாம்
ஓரொக்கும்மே.” *15*

## SECTION B

**Q5. பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் 150 சொற்களுக்கு மிகாமல் விடை தருக :** *10×5=50*

(a) ஒருவரைப் பல்வேறு மாந்தர்களாக உருமாற்றம் செய்வதற்கான காரணங்களைக் கண்ணன் பாட்டு கொண்டு விளக்குக. *10*

(b) தனிமனிதன் உலகைத் திருத்தமுடியாது என்று மு. வரதராசனார் ஏன் கூறுகிறார் ? *10*

(c) கதாநாயகன் - வில்லன் என்ற காவிய மரபு சித்திரப்பாவையில் எவ்வாறு புனையப்பட்டுள்ளது ? *10*

(d) வர்க்கப்பார்வை ஜெயசாந்தன் சிறுகதைகளில் எவ்வாறு புலப்படுகிறது ? *10*

(e) வாலப் பகடை தன் தொழிலை வலியுறுத்துவதற்கான காரணங்கள் யாவை ? *10*

**Q6. பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.**

(a) வணிக மரபுகளைக் குடும்ப விளக்கில் பாரதிதாசன் இணைத்திருப்பதற்கான காரணங்களை ஆராய்க. *20*

(b) தமிழகத்தின் தாழ்ந்த நிலைகளாக அண்ணா கருதுவனவற்றைத் தொகுத்துரைக்க. *15*

(c) தெம்மாங்குப் பாட்டின் உள்ளடக்கங்களைத் தொகுத்து விளக்குக. *15*

**Q7. பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.**

(a) "நா. காமராசனின் கறுப்பு மலர்களில் சமூகப் பிரக்ஞை" - கட்டுரை வரைக. *20*

(b) பாலியல் தொழிலைச் சமூகமே உருவாக்குகிறது என்ற கருத்தைச் சோ எவ்வாறு நிறுவுகிறார் ? *15*

(c) தமிழரின் நாட்டுப்புற இசை மரபுகளை விவரிக்க. *15*

**Q8. அனைத்து வினாக்களுக்கும் விடையளி.**

(a) 'கண்ணன் என் தோழன்' - என்ற பாடல்வழிப் புலப்படும் நட்பின் இலக்கணங்கள் - தொகுத்துரைக்க. *20*

(b) மாணிக்கம் - ஆனந்தி என்ற இருவருக்கிடையிலான உறவு எவ்வாறு அகிலனால் விவரிக்கப்படுகிறது ? *15*

(c) உடன்கட்டை ஏறும் மரபு முத்துப்பட்டன் கதையில் இடம்பெற்றதற்கான பண்பாட்டுப் பின்னணிகளை ஆராய்க. *15*

Civil Services (Main) Examination, 2024

**PHKM-B-TML**

# தமிழ் / TAMIL

**தாள் II / Paper II**

**(இலக்கியம்) / (LITERATURE)**

| | |
|---|---|
| கால அளவு : **மூன்று** மணி நேரம் | மொத்த மதிப்பெண்கள் : **250** |
| *Time Allowed : **Three** Hours* | *Maximum Marks : **250*** |

## வினாத்தாள் குறித்த அறிவுறுத்தல்கள்

**வினாக்களுக்கு விடையெழுதும், முன்பாகப் பின்வரும் அறிவுறுத்தல்களை அருள்கூர்ந்து படிக்கவும் :**

மொத்தம் **எட்டு** வினாக்கள் **இரண்டு பிரிவுகளாகப்** பகுக்கப்பட்டுள்ளன.

மொத்தத்தில் **ஐந்து** வினாக்களுக்கு விடையளிக்கவும்.

வினாக்கள் **1, 5** ஆகியவை கட்டாயம் விடையளிக்க வேண்டியவை. எஞ்சிய வினாக்களுள் பிரிவு ஒவ்வொன்றிலும் குறைந்தது **ஒரு** வினா தெரிவு செய்து **மூன்று** வினாக்களுக்கு விடையளிக்கவும்.

ஒரு வினா/ பகுதிக்கு உரிய மதிப்பெண் அதற்கு நேரே குறிக்கப்பட்டுள்ளது.

விடைகள் **தமிழில்** எழுதப்பட வேண்டும்.

வினாக்களில் குறிக்கப்பட்டுள்ள சொற்களின் எண்ணிக்கை வரம்பைக் கடைப்பிடித்தல் வேண்டும்.

விடையளிக்கப்பட்ட வினாக்கள் வரிசைமுறையில் கணக்கிடப்படும். ஒரு வினாவிற்கு ஒரு பகுதியே விடையெழுதப்பட்டிருப்பினும் கோடு இடப்பட்ட அவ்வினாவும் விடையளிக்கப்பட்ட வினாவாகக் கணக்கிடப்படும். விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்ட பக்கம் அல்லது பக்கத்தின் பகுதி தெளிவாகக் கோடு இடப்பட வேண்டும்.

## QUESTION PAPER SPECIFIC INSTRUCTIONS

***Please read each of the following instructions carefully before attempting questions :***

*There are **EIGHT** questions divided in **TWO SECTIONS**.*

*Candidate has to attempt **FIVE** questions in all.*

*Questions no. **1** and **5** are compulsory and out of the remaining, any **THREE** are to be attempted choosing at least **ONE** question from each section.*

*The number of marks carried by a question/part is indicated against it.*

*Answers must be written in **TAMIL**.*

*Word limit in questions, wherever specified, should be adhered to.*

*Attempts of questions shall be counted in sequential order. Unless struck off, attempt of a question shall be counted even if attempted partly. Any page or portion of the page left blank in the Question-cum-Answer Booklet must be clearly struck off.*

## SECTION A

**Q1. பின்வரும் வினா ஒவ்வொன்றிற்கும் 150 சொற்களுக்கு மிகாமல் விடை தருக :** *10×5=50*

(a) மன்னனுக்கு இருக்க வேண்டிய பண்புகள் எவை என்று திருக்குறள் கூறுகிறது ? *10*

(b) திருப்பாவைப் பாடல்கள் பெண்ணியப் பாடல்களா ? *10*

(c) இராவணன் தூதர்களுக்கு விட்ட கட்டளையும் அதன் விளைவுகளும் யாவை ? விளக்குக. *10*

(d) உலகப் பொது அறங்களைப் புறநானூற்றுப் புலவர்கள் எவ்வாறு விளக்கியுள்ளனர் ? *10*

(e) கண்ணகியின் பெண்மை வழக்குரை காதையில் எவ்வாறு வெளிப்படுகிறது ? *10*

**Q2. பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் விடை தருக :**

(a) கும்பகர்ணன், இராமன் ஆகிய இருவருக்கும் இடையில் நிகழ்ந்த போரினைக் கம்பர் எவ்வாறு விவரிக்கிறார் ? *20*

(b) குறுந்தொகையில் கூறப்பட்டுள்ள மாந்தர்களின் உணர்வுகளை விளக்கு. *15*

(c) தனது குற்றங்களாக மாணிக்கவாசகர் தெரிவிப்பன எவை ? ஏன். *15*

**Q3. பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் விடை தருக :**

(a) மக்கட்பேறு பாண்டியன் அறிவுடை நம்பியின் பாடலில் எவ்வாறு சிறப்பிக்கப்படுகிறது ? *20*

(b) பாவை நோன்பின் வழி அறியலாகும் பண்பாட்டுக் கூறுகளை விளக்கு. *15*

(c) திருவாசகத்தில் கூறப்படும் கடவுளின் உருவ வருணனைகள் எவ்வாறானவை ? ஏன் ? *15*

**Q4. பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் விடை தருக :**

(a) “போருழந்தெடுத்த ஆரெயில் நெடுங்கொடி வாரல் என்பன போல் மறித்துக் கைகாட்ட” *20*

(b) “கும்பிட்டு வாழ்கிலேன்; யான்
கூற்றையும் ஆடல் கொண்டேன்” *15*

(c) “ஆழிபோல் மின்னி வலம்புரிபோல் நின்றதிர்ந்து
தாழாதே சார்ங்கம் உதைந்த சரமழை” *15*

## SECTION B

**Q5. பின்வரும் வினா ஒவ்வொன்றிற்கும் 150 சொற்களுக்கு மிகாமல் விடை தருக :** *10×5=50*

(a) கண்ணன் பாட்டில் பதிவாகியுள்ள பக்திக் கருத்துகளை விளக்கு. *10*

(b) அடித்தள மக்களின் குரல் கறுப்பு மலர்களில் எவ்வாறு புலப்படுகிறது ? *10*

(c) தேர்தல் முறைக்கு மு.வ. இன் பரிந்துரைகள் யாவை ? விவாதி. *10*

(d) சோ சமூக விமர்சனத்தை யாருக்கும் வெட்கமில்லை நாடகத்தின் வழி எவ்வாறு வெளிப்படுத்துகிறார் ? *10*

(e) அகிலனின் கலைத் துறைக் கருத்துகளை விளக்கு. *10*

**Q6. பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் விடை தருக :**

(a) ஜெயகாந்தன் சிறுகதைகள் சமகாலத் தமிழ்ச் சமூகத்தை எவ்வாறு பதிவு செய்கின்றன ? *20*

(b) முத்துப்பட்டன் கதைப்பாடல் ஒரு தலித் இலக்கியமா ? விவாதி. *15*

(c) துறவறத்தைக் கண்டித்து இல்லறததைப் பாரதிதாசன் எவ்வாறு போற்றுகிறார் ? *15*

**Q7. பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் விடை தருக :**

(a) மக்களின் வறுமை மலையருவியில் எவ்வாறு படம்பிடித்துக் காட்டப்படுகிறது ? விவரி. *20*

(b) திருக்குறளின் தாக்கம் குடும்ப விளக்கில் எவ்வாறு புலப்படுகிறது ? விளக்கு. *15*

(c) தமிழகத்தின் மீது அண்ணா கொண்டிருந்த கருத்துகள் எவை ? ஏன் ? *15*

Q8. **பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் விடை தருக :**

(a) ஆநிரை கவர்தல், மீட்டல் என்ற போர்மரபு முத்துப் பட்டன் கதைப்பாடவில் இடம்பெற்றுள்ள முறையை விளக்கு. *20*

(b) முறைப்பெண்ணுக்கும் மாமனுக்கும் இடையில் நடைபெறும் உரையாடல் நாட்டுப்புறப் பாடலாவது எவ்வாறு ? *15*

(c) யாருக்கும் வெட்கமில்லை நாடகம் உணர்த்தும் குடும்பம் குறித்த மதிப்பீடுகள் எவை ? விளக்கு. *15*